சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராமப்புற சுகாதார மேம்பாடு – ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் புதியதாக அமைத்தல் – செயல்படுத்துதல் – நிதி ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.4) துறை**

**அரசாணை(நிலை) எண். 99** **நாள்: 22.10.2012**

**படிக்கப்பட்டவை:**

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15, கடித ந.க.எண்.28178/2012/முசுஇ1, நாள் 25.4.2012.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15, கடித ந.க.எண்.28178/2012/முசுஇ1, நாள் 5.7.2012.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15, கடித ந.க.எண்.28178/2012/முசுஇ1, நாள் 18.7.2012.

-----

**ஆணை:–**

09.04.2012 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கையின்போது சட்டப்பேரவையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

> **“கிராமப்புற சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வரும் இந்த அரசு, மகளிருக்கான சுகாதார வளாகங்கள் அமைத்து மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் பேணுவதைப் போல ஆண்கள் மற்றும் இளம்சிறார்களுக்காகவும் தனியாக சுகாதார வளாகம் அமைத்திட முடிவு செய்து, முதற்கட்டமாக 2012–13–ஆம் ஆண்டில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு என்ற வீதம் 770 கிராம ஊராட்சிகளில் ஆண்கள் சுகாதார வளாகங்கள் (Integrated Men Sanitary Complexes – IMSC) அமைக்கப்படும். இத்திட்டத்திற்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.”**

2. பெண்களுக்கு மேம்பட்ட சுகாதாரத்தை ஏற்படுத்த 2001–ஆம் ஆண்டில் அதற்கான முறையான சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாததால், ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, அவர்களின் பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் என்கிற அடிப்படையில், தமிழகத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2001–2004–க்குள் கட்டி முடிக்கப்பட்டன. இவ்வளாகங்களில் கழிவறைகள் மட்டுமன்றி, குளிக்கவும், துணி துவைக்கவும், தண்ணீர் விநியோகத்துடன் கூடிய சகல வசதிகளுடன்அமைக்கப்பட்டன.

> ஊரகப் பகுதிகளில் 100 சதவீதம் சுகாதாரத்துடன் தமிழ்நாடு, “திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலம்” என்ற இலக்கினை அடையும் பொருட்டு ஆண்களின் நெடுநாளைய தேவையான ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகத்தையும் அமைத்துக் கொடுக்க இந்த அரசு முடிவெடுத்து அதற்கான அறிவிப்பையும் மேற்கண்டவாறு வெளியிட்டுள்ளது.

**3.** மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது செயற்குறிப்பில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தைப் போன்றே தமிழகத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் தலா சுமார் ரூ. **4.00** லட்சம் மதிப்பீட்டில் **570** சதுர அடி பரப்பளவில் **2012–13–**ம் ஆண்டில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு என்ற விகிதத்தில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் கட்டுவதற்கும், ஒவ்வொரு வளாகமும் **6** இந்திய கழிவறை, முதியோர் / மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் கைப்பிடி வசதியுடன் கூடிய **1** ஐரோப்பிய கழிவறை (Western Colset), இளம்சிறார்கள் (Baby friendly toilet) பயன்படுத்தக்கூடிய கழிவறை, தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும் எனவும், மேலும் இவ்வளாகத்திலுள்ள சுகாதார வசதிகளை பயன்படுத்த உபயோகிப்பாளர்கள் இனங்கண்டு குழுவாக்கப்படுவர் எனவும் தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் செய்து கொடுத்தும், சம்மந்தப்பட்ட குடும்பங்கள் அதனை பராமரிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

**ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் அமைப்பதன் முக்கிய நோக்கங்கள்**

1. திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
2. பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், சுகாதாரத்தின் அவசியம் குறித்து அனைத்துத்தரப்பு மக்களுக்கும் முக்கியத்துவத்தை உணர வைத்தல்.
3. பல்வேறு புவியமைப்புகளில், தண்ணீர் கிடைக்கும் நிலை, நீராதாரம் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.
4. அறிவுசார் திறமைகள் மூலம் சுகாதாரப் பழக்க வழக்கத்தை ஊக்குவித்து சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
5. சுற்றுச்சூழல் சுகாதாரத்தைப் பேணுவதில், சமுதாயத்திற்கும் ஊராட்சி அமைப்புகளுக்கும் மேலாண்மைத் திறனைப் பலப்படுத்துதல்.
6. சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.

**4.** மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், **2012–2013–**ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகத் திட்டத்தினை செயல்படுத்த மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ஆகஸ்டு **2012–**லிருந்து ஜனவரி **2013** வரை **6** சமமான மாதத் தவணையாக ரூ.**35/–** கோடியை மாவட்டத்தின் தக்க தேவைக்கேற்ப விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். **2012–2013–**ஆம் ஆண்டுக்கு **770** ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் கட்ட ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த தொகை:–

| மாவட்ட ஊராட்சியின் பங்கு | ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு | கிராம ஊராட்சிகளின் பங்கு |
|---|---|---|
| ரூ.**5/–** கோடி (**1** மாதத்திற்கு ரூ.**83.33** இலட்சம் வீதம் **6** மாதத்திற்கு) | ரூ. **15/–** கோடி (**1** மாதத்திற்கு ரூ.**2.50** கோடி வீதம் **6** மாதத்திற்கு) | ரூ. **15/–** கோடி (**1** மாதத்திற்கு ரூ.**2.50** கோடி வீதம் **6** மாதத்திற்கு) |

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கீழ்க்கண்ட அதிகாரங்கள் வழங்கி ஆணை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றை அரசு நன்கு ஆய்வு செய்து, ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

அ) தமிழகத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் தலா சுமார் ரூ. 4.00 லட்சம் மதிப்பீட்டில் 570 சதுர அடி பரப்பளவில் 2012–13–ம் ஆண்டில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு என்ற விகிதத்தில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் கட்டப்படவேண்டும்.

ஆ) மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் ஆகியவற்றுக்கு அளிக்கப்பெறும் பங்கிலிருந்து மேற்கொள்ள ரூ.35/– கோடியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் விடுவிப்பார்,

இ) மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற, மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூ.35/– கோடி நிதியை மாவட்டத்தின் தக்க தேவைகளுக்கேற்றவாறு உரிய தவணைகளாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் விடுவிப்பார்,

ஈ) 1998–ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் அதன் 2000–ம் ஆண்டு விதிகளின்படி வட்டார ஊராட்சிகளின் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை அறிவுறுத்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

உ) ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகத் திட்டம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.58824/ஊ.வ (ம) ஊ/2012, நாள் 22.10.2012 பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்(பயிற்சி), சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள், சென்னை–9.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நிதி (ஊவ) துறை, சென்னை–9.
நிதி (Budget Gen-1/Budget Gen-II/W&M-1) துறை, சென்னை–9
நிதி (சம்பளம்) துறை, சென்னை–9.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
நகல்
தலைமைச் செயலரின் தனி செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## அரசாணை (நிலை) எண்.99, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை, நாள் 22.10.2012

## பிற்சேர்கை

## வழிகாட்டு நெறிமுறைகள்

## ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகத் திட்டம்

**நோக்கம்:–**

சுகாதாரமான வாழ்க்கை முறையும், சுத்தமான சுற்றுச் சூழலுமே நல்வாழ்வை உறுதி செய்யும் என்பதையும், அவை எவ்வளவு அவசியம் என்பதையும் நம் முன்னோர்கள் உணர்ந்திருந்தனர். ஊரகப் பகுதிகளில் சுகாதாரம், அதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்பு உணர்வு போதுமான அளவில் இல்லாத சூழ்நிலையே காணப்படுகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) அறிக்கையில், நமது நாடு போன்ற வளரும் நாடுகளில் ஊரகப் பகுதி மக்களின் பெரும்பாலான நோய்களுக்கான மூல காரணம், அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாமை, கழிப்பறை வசதி இன்மையால் திறந்த வெளிகளில் மல ஜலம் கழித்தல் போன்ற செயல்களை புரிந்திடும் சூழ்நிலை, மாசுபட்ட நீரை பயன்படுத்தி அதில் குளித்தல் போன்றவையே ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், தக்க கழிப்பிட மற்றும் குளிப்பதற்கான வசதி இன்றி பெரிதும் அல்லல்படும் நிலையே தற்போது நிலவி வருகின்றது. இந்த அவலநிலையை போக்கிட ஊரகப் பகுதிகளில் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எல்லா கால நிலைகளிலும் பயன்படுத்திட தகுந்த கழிப்பிட, குளியல் மற்றும் துணி துவைக்கும் வசதிகளை கொண்ட ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் அமைக்கப்பட்டு தற்சமயம் அவை புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பகுதிகளில் புதிய தோற்றத்தையும் மாற்றத்தையும் உருவாக்கியுள்ளது. இவ்வசதிகளை கிராமப்புற ஆண்களும் பெற வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே, ஊரக ஆண்கள் சுகாதாரமான முறையில் கழிப்பிடங்கள் உபயோகிக்க நிரந்தரமான நீராதாரம், மின்விளக்கு மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய பாதுகாப்பு வசதி ஆகியவற்றுடன் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் இரு ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்கள் ‘‘ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம்’’ என்ற திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இதன்படி தமிழக அரசால் 2012–2013ல், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் இத்திட்டம் முழு வீச்சில் செயல்படுத்தப்பட உள்ளது.

- ✓ கிராமப்புறங்களில் ஆண்கள் கழிப்பறை அமைப்பதன் மூலம் முழு சுகாதாரம் அடைய வழி ஏற்படும். அதனால் சுற்றுச் சூழல் மாசுபடுவதை முற்றிலுமாகத் தடுத்து நோயற்ற வாழ்வைப் பெறச் செய்தல்.
- ✓ ஆண்களுக்கு சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.
- ✓ பாதுகாப்பான மற்றும் கண்ணியமான, கௌரவத்தையும் உறுதி செய்யும் வகையில் சுகாதார தேவைகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- ✓ தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்க, துணி துவைப்பதற்கான இடம் மற்றும் கழிப்பிடம் ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ் அமைத்துத் தருதல், போன்ற திட்டக் கூறுகள் இதன்வழி நிறைவு செய்யப்படுகின்றன.

## 2. விழிப்புணர்வு மற்றும் பயிற்சி மூலம் சுகாதாரத்தின் அவசியத்தை உணர்த்துதல்

பயன்படுத்துவோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் சுகாதாரமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, சுகாதார வளாகத்தை தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதி செய்ய இயலும். தேவையின் அவசியத்தினை உணராத பட்சத்தில் அவர்கள் தங்களுடைய பழைய பழக்கத்திலிருந்து மீளுவது சிரமமாக இருக்கக் கூடும். இந்த அடிப்படையில் எந்த சாதனத்தை கையாண்டால் நாம் கொடுக்கும் செய்தி வெற்றிகரமாக சென்றடையும் என்பதை சிந்தித்து கையாள வேண்டும்.

உதாரணமாக, ஓரளவு எழுத்தறிவு பெற்று இருக்கும் குடும்பங்கள் குழுவில் இருக்கும் பட்சத்தில் பயன்படுத்துவோர் கையேடு விநியோகிப்பது நல்ல பலனை தரும். எழுத்தறிவே இல்லாதவர்கள் குழுவில் இருப்பார்களானால் நேரடி பயிற்சி மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

விழிப்புணர்வை ஏற்படுவதற்கு கீழ்கண்டவற்றில் ஏதேனும் சில முறைகள் அல்லது அனைத்து முறைகளையும் பின்பற்றலாம்.

- ✓ துண்டு பிரசுரங்கள் மற்றும் கையேடுகள்.
- ✓ சுவர்களில் பயன்படுத்துவதை சித்தரிக்கும் வரைபடங்கள் அமைத்தல்
- ✓ செய்திப்படம்
- ✓ கேபிள் டி.வி.
- ✓ சுவரொட்டிகள்
- ✓ கிராமசபையில் விவாதப் பொருளாக எடுத்துக்கொள்வதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- ✓ நேரடி பயிற்சி

**நேரடிப் பயிற்சி:–**

விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நேரடி பயிற்சி மிக முக்கியமானதாகும். குறிப்பாக பயன்படுத்துவோர் குழுவினருக்கு பயிற்சி அளிப்பது அவசியமானதாகும். ஏனெனில் நேரடி தொடர்பில், பயிற்சியாளர்களின் சந்தேகங்களுக்கு உடனடி தீர்வு கிடைப்பதுடன், பயிற்சியாளர்களும் தங்களுடைய கருத்துகளை தெரிவிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது மற்றும் பயிற்சியின் நோக்கம் முழுமையாக புரிந்து கொள்ளப்பட்டதா ? என்பதையும் அறிந்து கொள்ள இயலும்.

**நேரடி பயிற்சி நடத்துவதற்கான இடம்:–**

பயனாளிகள் குடியிருக்கும் பகுதிகள் கிராம சபை கூடும் இடம், நீர்த் தேக்கத் தொட்டி போன்ற பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இப்பயிற்சியை நடத்துவது சாலச்சிறந்தது.

நேரடி பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராக வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) செயல்படுவார். களப் பணியாளர் மற்றும் சம்மந்தப்பட்ட வளாகத்தின் தொடர்பு அலுவலர் உதவியுடன் பயிற்றுனர் மற்றும் பயிற்சியாளர்களை கண்டறிதல், பயிற்சி நடத்தும் இடத்தினை தேர்வு செய்தல், பயிற்சி நடத்திட தொடர்பு நடவடிக்கை எடுத்தல் ஆகியவை அவருடைய முக்கிய கடமைகளாகும்.

பள்ளி மாணாக்கர்களிடையே விழிப்புணர்வு குறித்த பயிற்சியில் சொல்லப்படும் செய்தி அவர்களுடைய குடும்பத்திற்கு முறையாக சென்றடைய அதிகமாகவே வாய்ப்புள்ளதால் பள்ளிகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படலாம்.

இப்பயிற்சிகளை, அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், அறிவொளி இயக்கங்கள் / தொடர் கல்வி இயக்கங்கள், மருத்துவர்கள், கிராம செவிலியர், தனியார் நிறுவனங்கள், அரசு அலுவலர்கள், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்போடு மேற்கொள்ளலாம்.

இதுபோன்ற விழிப்புணர்வு பயிற்சிகளில் அரசு அலுவலர்கள் / மண்டல அலுவலர்கள் பங்கேற்பது மிக அவசியம். பொதுவாக கீழ்கண்ட பொருட்களில் பயிற்சி விவரம் அமைவது சிறப்பான மற்றும் நல்ல பலனை தரும்.

- ✓ கழிப்பறையை பயன்படுத்தாமல் திறந்த வெளியை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள், இடையூறுகள்.
- ✓ சுகாதாரம் என்பதன் பொருள் மற்றும் அதன் முக்கிய கூறுகள்
- ✓ கழிப்பறை அல்லது சுகாதார வளாகத்தை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள்
- ✓ ஆண்கள் சுகாதார வளாகத்தில் செய்துக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகள்
- ✓ கழிப்பறையை பயன்படுத்தும் முறை
- ✓ ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகத்தை நிர்வகித்தலும், பராமரித்தலும்
- ✓ சுகாதார வளாகம் பராமரிப்பில் சிக்கனம்
- ✓ சுகாதார வளாகத்திற்குள் செய்யக்கூடாதவை
- ✓ ஊக்குவிப்பாளரின், பயன்படுத்துவோரின் பொறுப்புகள்
- ✓ சுகாதாரப் பணியாளரின் பொறுப்புகள்

**3. அ. பயன்படுத்துவோர் குழுவினை அமைத்தல்**

திட்டத்தினை செயல்படுத்துவதில் ''பயன்படுத்துவோர் குழு'' அமைத்தல் மிக முக்கியமான முதல் கட்டப் பணியாகும். ஏனெனில் இத்திட்டத்தினை வெற்றிக்கு அடிப்படையாக அமைவது பயன்படுத்துவோரிடையே ஏற்படுத்தப்படும் விழிப்புணர்வு மற்றும் சுகாதாரத்தின் தேவையை உணர்ந்திருத்தல் ஆகும். இதன் அடிப்படையில் பயன்படுத்துவோர் குடும்பங்களை கண்டறிந்து குழுவாக அமைக்க வேண்டும். மேலே பத்தி 2ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு விழிப்புணர்வுப் பயிற்சிகளை இரண்டு கட்டங்களாக நடத்தலாம். பயன்படுத்துவோர் குழு உறுப்பினர்களை கண்டறிவதற்கு முன்னர் மற்றும் அதற்கு பின்னர் நடத்துவது தொடர் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் வளாகத்தின் பயன்பாட்டினை உறுதிச் செய்வதற்கும் ஏதுவாக அமையும், பயன்படுத்துவோர் குழுக்களை அமைப்பது சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), தொடர்பு அலுவலர், கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் வளாகம் அமையவுள்ள வார்டு உறுப்பினர் ஆகியோரின் பொறுப்பாகும்.

**ஆ. கட்டுமானப் பணிகளை கண்காணித்தல் மற்றும் பயன்படுத்துவோர் குழுவுடன் கலந்துரையாடல்**

சுகாதார வளாகத்தின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு பயன்படுத்துவோரை சார்ந்து அமைவதால் வளாகம் கட்டிமுடிக்கப்பட்டு முறையான பயன்பாட்டினை உறுதி செய்தலில் அவர்களுடைய பங்கு மற்றும் ஈடுபாடு இன்றியமையாததாகும். கட்டுமானப் பணியின் போது, வளாகத்தை ஆய்வு செய்யும் அலுவலர்களான – மாவட்ட ஆட்சித் தலைவர், திட்ட அலுவலர்,

மண்டல அலுவலர்கள், தொடர்பு அலுவலர் ஆகியோர், பயன்படுத்துவோர் குழுவுடன் கலந்துரையாடி தேவைப்படும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**4. ஊக்குவிப்பாளர்**

பயன்படுத்துவோர் குழுவின் தலைவர் ஊக்குவிப்பாளராக செயல்பட வேண்டும். விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வளாகம் அமையும் இடத்தை தேர்வு செய்தல், கட்டுமானப் பணியை கண்காணித்தல் முதற்கொண்டு வளாகம் கட்டி முடிக்கப்பட்ட பின் அதன் பராமரிப்பிலும் ஊக்குவிப்பாளரின் கடமை இன்றியமையாததாகும்.

**5. வளாகம் அமையும் இடத்தை தேர்வு செய்தல்**

- ✓ குடியிருப்புகள் அடர்த்தியாகவும், தனிநபர் கழிப்பிட வசதியில்லாத பகுதிகளின் அருகிலோ தினந்தோறும் ஆண்கள் அதிகம் கூடுமிடங்களான சந்தை, கடைத்தெருக்கள் மற்றும் பேருந்து நிலையம் போன்ற இடத்திற்கு அருகிலோ தேர்வு செய்ய பரிசீலிக்கலாம்.
- ✓ வளாகம் அமையும் இடத்தில் தண்ணீர் தட்டுபாடின்றி கிடைக்கும் வண்ணம் நீர்வளம் உள்ளதா என்பதை சந்தேகத்திற்கிடமின்றி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ✓ கிராம ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளில் எங்கு நிறைந்த நீர் வளம் ஆண்டு முழுவதும் கிடைக்கும் வாயப்பு உள்ளதோ, அந்த குடியிருப்பை தேர்வு செய்ய வேண்டும்.
- ✓ ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் அல்லது அரசு புறம்போக்கு நிலங்களில் இருந்து வளாகத்திற்கான இடம் தேர்வு செய்யலாம். இது பயன்படுத்துவோர் ஏற்றுக்கொள்ளத் தக்க இடமாகவும் இருத்தல் மிகவும் அவசியம்.
- ✓ குடியிருப்பு பகுதியில் புறம்போக்கு நிலம் இல்லாத பட்சத்தில், ஏற்கனவே திறந்த வெளி கழிப்பிடமாக அதிகம் பயன்படுத்தப்படும் இடத்தில் வளாகத்தினை அமைக்கலாம்.
- ✓ உள்ளூர் பிரமுகர்கள் தானமாக வழங்கக் கூடிய இடத்தையும் ஏற்றுக்கொள்ளலாம்.
- ✓ தேர்வு செய்யப்படும் இடம் சரியான இடமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் பயன்படுத்துவோர் குழுவிலுள்ள அனைவரும் பிரச்சனையின்றி சுலபமாக பயன்படுத்தும் கையில் உள்ளதாக அமைய வேண்டும்.
- ✓ நீதி மன்றத்தில் வழக்கில் உள்ளவை ஆக்கிரமிப்பில் உள்ளவை போன்ற பிரச்சனைக்குரிய எந்த இடத்தையும் தேர்வு செய்தல் சுடாது.
- ✓ மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில் நேரடி ஆய்வின் மூலம் வளாகம் அமைப்பதற்கு தேர்வுச் செய்யப்பட்ட இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் தனது குறிப்புரையுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைத்து ஒப்புதல் பெற வேண்டும்.

**6. தண்ணீர் வசதி**

- ✓ தண்ணீர் வசதி அவசியம் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.
- ✓ சுகாதார வளாகத்திற்கு தனிப்பட்ட நீர் ஆதாரம் உருவாக்கப்பட வேண்டும். புவியியல் ஆய்வு மூலம் நீர் வளம் அறியப்பட வேண்டும்.

- ✓ வளாகத்தின் நீடித்த பயன்பாடு மற்றும் முழுமையான உபயோகம் என்பது தட்டுப்பாடு இன்றி தினசரி தண்ணீர் பயன்பாட்டிற்கு கிடைப்பதை அடிப்படையாக கொண்டதாகும். எனவே, நீராதாரத்தின் நிரந்தர தன்மையை முழுமையாக உறுதி செய்து கொண்ட பின்னர் தான் கட்டுமானப் பணியினை ஆரம்பிக்க வேண்டும்.

**7. நிதி ஒதுக்கீடு**

ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகப் பணியானது, மாநில அரசின் முழுமையான நிதியிலிருந்து 7.3 மீ X 7.2 மீ (570 ச.அடி) ஆகிய நீள, அகலத்தில், அலகு தொகை ரூ.4.00 இலட்சத்தில் (570 ச.அடி) அமைக்கப்படுகிறது. இந்த மதிப்பீட்டில் ஆழ்துளை கிணற்றின் மூலம் தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுப்பதற்கு ரூ.1.00 லட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. வளாகத்தின் அமைப்பு**

- ✓ இந்த வளாகத்தின் மொத்த பரப்பளவு 570 சதுர அடியாகும். (வளாக வரைபட மற்றும் உத்தேச மதிப்பீடுகள் இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ளது).
- ✓ ஒவ்வொரு வளாகத்திலும் 6 இந்திய கழிவறை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்த ஏதுவாக கைப்பிடி பொருத்தப்பட்ட 1 ஐரோப்பிய கழிவறை (**Western Closet**), இளம்சிறார்கள் பயன்படுத்தக்கூடிய கழிவறை (**Baby friendly toilet**), குளிப்பதற்கான இடம், தண்ணீர் வசதியுடன் சுடிய தொட்டி மற்றும் கை கழுவும் கோப்பை, துணி துவைக்கும் கல் ஆகியவை அமைக்கப்பட வேண்டும்.
- ✓ சுகாதார வளாகத்திற்கென்று தனிப்பட்ட நிரந்தரமான தண்ணீர் வசதி செய்து தரப்பட வேண்டும். ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு பம்புசெட் மூலம் 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்கத் தொட்டியிலிருந்து துணி துவைப்பதற்கும் மற்றும் கழிவறைக்கும் தண்ணீர் விநியோகிக்கப்பட வேண்டும்.
- ✓ கழிப்பறை கதவுகளின் உயரம் 1.80 மீட்டர் மற்றும் அகலம் 0.75 மீட்டர் இருப்பதுடன் தரம் வாய்ந்ததாக இருத்தல் அவசியம் ஆகும். இளம்சிறார்கள் பயன்படுத்தக்கூடிய கழிப்பறைக்கு 2 அடி உயரத்தில் இருத்தல் அவசியம். கழிப்பறை கதவுகளை பொருத்தும் போது கீழ்கண்டவாறு இடைவெளி உள்ளவாறு பொருத்தப்பட வேண்டும். தரைமட்டத்திலிருந்து 7.5 செ.மீ. இடைவெளியும், மேல் பகுதியில் 6.0 செ.மீ. இடைவெளியும் இருத்தல் வேண்டும். நீரேற்று அறையின் கதவை மட்டும், உள்ளிருக்கும் பொருட்களின் பாதுகாப்பு கருதி வாயிலின் முழு அளவையும் மறைக்கும் விதமாக அமைக்க வேண்டும்.
- ✓ கழிப்பறை தடுப்புச் சுவர்கள் 5 அடி உயரம் இருந்தால் போதுமானது.
- ✓ தண்ணீர் தொட்டியின் அடித்தளம் தரை மட்ட அளவில் அமைக்கப்பட வேண்டும்.
- ✓ துணி துவைப்பதற்காக பயன்படுத்தப்படும் தண்ணீர், வளாகத்தில் தரையில் எங்கும் தேங்காத வண்ணம் மட்டும் அமைத்திடல் அவசியம்.
- ✓ பாதுகாப்பிற்காக தேவையான இடங்களில் சுவற்றில் மீது கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பட வேண்டும்.

- ✓ துணி துவைக்க பயன்படுத்தப்பட்ட, மற்றும் குளியலறையிலிருந்து வெளியேறும் கழிவு நீரை செரிமான தொட்டிக்கு (செப்டிக் டேங்க்) கொண்டு செல்லாமல் தனி பைப்புகள் மூலம் வெளியேற்றி வளாகத்தின் அருகில் அமைக்கப்படும் தோட்டத்திற்கு பயன்படுத்தலாம்.
- ✓ நீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்குதல் வேண்டும்.
- ✓ கழிப்பறைகளுக்கு பொருத்தப்படும் ஜாலிகள் சிறிய துவாரம் கொண்டதாக அல்லது லூவர் ஜாலிகளாக அமைக்கப்படுவதன் மூலம் பாதுகாப்புத் தன்மையை உறுதிச் செய்தல் அவசியம்.
- ✓ கழிப்பிடங்களை வயதானவர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக தடுப்புச் சுவர்களில் தரைமட்டத்தில் இருந்து 2 அடி உயரத்தில் ஒரு கைப்பிடி பொருத்தப்பட வேண்டும்.
- ✓ மூலைகளில் உள்ள கழிவறை, கதவுகள் ஒன்றுக்கொன்று இடிக்காத அளவிற்கு திட்டமிட்டு அமைத்தல் வேண்டும்.
- ✓ வளாகத்தை உடல் ஊனமுற்றவர்களும் பயன்படுத்துவதற்கு வசதியாக சாய்வு நடைமேடையும் அமைக்க வேண்டும்.
- ✓ வளாகத்தின் பயன்பாட்டிற்கு நிலையான நீராதாரம் என்பது மிக அவசியமானது என்பதால் நீராதாரத்தின் அருகிலோ அல்லது வளாகத்திற்கு அருகாமையிலோ மழை மற்றும் இதர பயன்படுத்தப்பட்ட நீரை சேகரிக்கும் வகையில் ஒரு நீர் சேகரிக்கும் குழி அமைக்கப்பட வேண்டும்.

**9. செரிமானத் தொட்டி அமைத்தல்**

செரிமானத் தொட்டி **(Septic tank)** முறையாக அமைக்கப்பட வேண்டும். செரிமானத் தொட்டி கழிவுநீர் வரத்துக் குழாயின் மட்டத்திலிருந்து, கழிவு நீர் வெளியேறும் குழாயின் மட்டம் 15 செ.மீ. குறைவாக இருத்தல் வேண்டும். கட்டாயமாக சாளரக் குழாய் **(Air vent)** அமைக்கப்பட வேண்டும். கழிவு நீரோட்டம் தொட்டிக்குள் நேராக வெளியேறாமல் தடுக்கப்பட ஃபேபிள் தடுப்புச்சுவர்கள் வேண்டும். தொட்டியானது நீர்க்கசிவு இல்லாத வண்ணம் மிகுந்த தரத்துடன் கட்டப்பட வேண்டும்.

செரிமானத் தொட்டியிலிருந்து வெளியேறும் கழிவு நீரை, நீர்க்கசிவு தொட்டி **(soak pit)** மூலமாகத் தான் விட வேண்டும். கழிவு நீர்க்கசிவுத் தொட்டியின் அளவு, கட்டப்படும் மண்ணின் ஊடுறுவுத் திறனைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டும். மேலும் கழிவு நீர்க்கசிவுத் தொட்டிக்கும், குடிநீர் ஆதாரமாக பயன்படக்கூடிய திறந்த வெளிக் கிணறுகளுக்கும் இடையே குறைந்த பட்சம் 20 மீ இடைவெளி இருத்தல் அவசியம் ஆகும். செரிமான தொட்டியினை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டும். (செரிமானத் தொட்டி வரைபடம் இணைப்பு – IIல் கொடுக்கப்பட்டுள்ளது)

**10. நிர்வாக அனுமதி**

நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதிச்செய்துக்கொள்ள வேண்டும்.

- ✓ வளாகம் அமைப்பதற்கான இடத்தேர்வு வழிக்காட்டி நெறிமுறைகளின் படி செய்யப்பட்டுள்ளது.
- ✓ பயன்படுத்துவோர் குழுக்கள் அமைக்கப்பட்டு இடத்தேர்வுக் குறித்த கருத்துக்களும் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளன.
- ✓ விரிவான மதிப்பீ டு **(Detailed Estimate)** தயாரிக்கப்பட்டுள்ளது.

- ✓ தேர்வுச் செய்யப்பட்ட இடத்திற்கான புகைப்படங்கள் மற்றும் வருவாய்த் துறை ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது.
- ✓ நீர் ஆதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**11. வளாகத்தை கட்டுதல்**

இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) இத்திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு பொறுப்பு அலுவலராவார்.

விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**12. தரமான கட்டமைப்பு**

கட்டுமானப் பணியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் தரக்கட்டுப்பாடு அவசியமாகும். மேலும், வளாகத்தின் அமைப்பில், எவ்வித குறைபாடும் இன்றி, முழுமையாக, தரமானதாக கட்டி முடிக்கப்பட வேண்டும்.

**13. கண்காணிப்பு குழுக்கள் மற்றும் தொடர்பு அலுவலர்களை அமைத்தல்**

சுகாதார வளாகம் கட்டப்படும் போதும், கட்டி முடிந்த பின்னர் பராமரிக்கப்படுவதையும் கண்காணிப்பதை ஏற்கனவே அரசாணை (1D) எண். 582, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாநிலத் திட்டம் 4) துறை, நாள் 2.12.2011–ல் கொடுக்கப்பட்டுள்ள வழிக்காட்டி நெறிமுறைகளின்படி அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான மற்றும் வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் உறுதிச் செய்ய வேண்டும். இந்த குழுக்களில் கூடுதலாக ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் அமைந்துள்ள கிராம ஊராட்சிகளின் தலைவர்கள் உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும். மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில் நடைப்பெறும் இக்குழுக்களின் கூட்டத்தில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகத்தின் செயல்பாடும் விவாதிக்கப்பட வேண்டும்.

**தொடர்பு அலுவலர்**

மாவட்டத்தில் உதவித் திட்ட அலுவலர் (வீட்டு வசதி மற்றும் சுகாதாரம்) தொடர்பு அலுவலராக நியமிக்கப்படுகிறார். வட்டார அளவில் ஊராட்சிகளை தொகுப்புகளாக பிரித்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களை தொடர்பு அலுவலர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

**தொடர்பு அலுவலரின் கடமைகள்**

- ✓ மாவட்ட அளவில் கூட்டங்களுக்கு உரிய நாளில் ஏற்பாடு செய்து, கூட்டத்தில் விவாதிக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் வழங்கப்படும் ஆலோசனைகள் குறித்து தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் இது குறித்த அறிக்கையினை கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியோருக்கு கூட்டம் முடிந்த இரண்டு தினங்களில் உரிய படிவத்தில் அனுப்பி வைத்தல்.
- ✓ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் தற்போது உதவி திட்ட அலுவலர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகன வசதி செய்து தரப்பட்டுள்ளதை முழுமையாக பயன்படுத்தி மாவட்ட தொடர்பு அலுவலர் / உதவி திட்ட அலுவலர் (வீட்டு வசதி மற்றும் சுகாதாரம்) சுகாதார வளாகங்களை அடிக்கடி ஆய்வு செய்து

அவைகளின் கட்டுமான பணிகளையும் அது முடிவுற்றபின் செயல்பாட்டையும் பயன்பாட்டையும் உறுதி செய்ய வேண்டும்.

- ✓ வட்டார தொடர்பு அலுவலர் வட்டார அளவிலான கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளை தொகுத்து தொடர் நடவடிக்கை எடுத்து அவை குறித்து கூட்டம் முடிந்த இரண்டு தினங்களில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்பி வைக்க வேண்டும்.
- ✓ மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் குழுக்கள் கூடி விவாதிக்கும் போது பொதுவாக விவாதிக்காமல் ஒவ்வொரு வளாகம் பற்றியும் குறிப்பிட்டு விவாதிக்க வேண்டும்.
- ✓ சுகாதார வளாகத்தை அடிக்கடி பார்வையிட வேண்டும்.
- ✓ வளாக பராமரிப்பு குறித்து உபயோகிப்பாளர் குழுவுடன் கலந்து உரையாட வேண்டும்.
- ✓ வளாக பராமரிப்பில் ஏற்படக்கூடிய சிறுசிறு பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ✓ உபயோகிப்பாளர் குழுவிற்கு விழிப்புணர்வு குழு பயிற்சி அளிப்பதில் முழு கவனம் செலுத்த வேண்டும்.
- ✓ வளாகத்தின் பராமரிப்பிற்கு அத்தியாவசிய தேவையான சந்தா தொகை வசூலித்தல், செலவினத்தில் சிக்கனம், கணக்குகள் பராமரிப்பு குறித்து உபயோகிப்பாளர் குழுவிற்கு தக்க அறிவுரைகள் வழங்கி அவ்வப்போது கண்காணித்தல் வேண்டும்.
- ✓ வளாகத்தினை அதிகமான அளவில் ஆண்கள் பயன்படுத்துவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ உபயோகிப்பாளர்களிடையே, பயன்படுத்தும் நேரம், அறைகள் இவை குறித்த அல்லது வேறுவகையான பிரச்சனைகள் ஏற்பட்டால் அவற்றை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய வேண்டும்.

**14. வளாகத்தின் கட்டுமானம், பயன்பாடு மற்றும் பராமரிப்பை மண்டல அலுவலர்கள் மூலம் கண்காணித்தல்**

- ✓ மாவட்ட ஆட்சித் தலைவர், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் உதவி இயக்குநர் / துணை ஆட்சியர் நிலைக்கு குறையாத அலுவலர்களை மண்டல அலுவலர்களாக நியமிக்க வேண்டும். மாவட்டத்திலுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களை முழுமையாக ஈடுபடுத்துவது சாலச்சிறந்தது. மேலும், கள ஆய்வுக்கு செல்லும் மாவட்ட அளவிலான அனைத்து துறை அலுவலர்களுக்கும் ஒரு மாதத்திற்கு குறைந்த பட்சம் 10 ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகம் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்களை ஆய்வு செய்ய வேண்டும் என ஒதுக்கீடு நிர்ணயம் செய்து ஆய்வு செய்வதன் மூலம் திட்டத்தின் செயலாக்கத்தை செம்மைப்படுத்த முடியும். ஆய்வு நிலையின் தொடர் நடவடிக்கை மிகவும் அவசியம்.
- ✓ வட்டார அளவிலான தொடர்பு அலுவலர்களை, ஊராட்சி ஒன்றிய களப் பணியாளர்களைக் கொண்டு நியமனம் செய்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திட்டத்தின் செயல்பாட்டை கண்காணிக்க வேண்டும்.
- ✓ மாவட்ட அளவிலான மண்டல அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் மாதம் ஒரு முறை கூட்டி அதில் சொல்லப்படும் கருத்துக்கள் / குறைகளை ஆராய்ந்து

தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் வட்டார அளவிலான மண்டல அலுவலர்கள் /தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாதம் இருமுறை கூட்டி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- ✓ அவசர அவசியத்தை முன்னிட்டு இக்கூட்டங்கள் இடையிலும் கூட்டப்படலாம்.
- ✓ மாவட்ட ஆட்சித் தலைவர்கள், திட்ட செயல்பாட்டில் குறைபாடுகள் இருப்பின் அதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கவனத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அதை அரசின் கவனத்திற்கு உடனே கொண்டு வர வேண்டும்.

**15. சுகாதார வளாகத்தை பராமரித்தல்**

- ✓ ஒவ்வொரு வளாகத்திற்கும் பயன்படுத்துவோர் பராமரிப்பு குழு அமைக்க வேண்டும்.
- ✓ தினசரி சுத்தம் செய்து பராமரித்தல் தொடர்பான செலவினத்தை பயன்படுத்துவோர் குழுக்கள் மேற்கொள்ள ஊக்குவித்து, பராமரிப்பு குழு அருகிலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கி அல்லது தபால் அலுவலகத்தில் சேமிப்பு கணக்கைத் துவங்க வேண்டும்.
- ✓ பயன்படுத்துவோர் குடும்பங்கள் ஒவ்வொன்றும் இந்த தினசரி பராமரிப்பு நிதிக்கு தன் மாதாந்திர தொகையை செலுத்த வேண்டும். உதாரணமாக, சுத்தம் செய்வதற்கான பொருட்கள் மற்றும் சுத்தம் செய்வதற்காக நியமிக்கப்படும் ஊழியரின் ஊதியம் போன்ற செலவினம் ஒரு மாதத்திற்கு உத்தேசமாக ரூ.1000/– வரை அந்தந்த பகுதிகளில் சூழ்நிலைக்கேற்ப செலவாவதற்கு வாய்ப்புள்ளது. இதை பயன்படுத்துவோர் குழுவினர் சமமாக பகிர்ந்து கொள்ளும் பட்சத்தில் 50 உறுப்பினர்கள் இருப்பின் ஒரு நபர் மாதத்திற்கு ரூ.20/– முதல் ரூ.25/– வரை இந்த பராமரிப்பு நிதிக்கு செலுத்த வேண்டியிருக்கும். கூடுதலான உறுப்பினர்கள் இருக்கும் பட்சத்தில் இத்தொகை மேலும் குறைய வாய்ப்புள்ளது.
- ✓ பராமரிப்புக்குழு, வாரம் ஒரு முறை, அல்லது தேவையானால் அதற்கிடையில் கூடி வளாகத்தை பராமரித்தல் தொடர்பான அனைத்து அம்சங்களையும் விவாதித்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்.
- ✓ மின்சாரக்கட்டணம் மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டிய (Peridical Maintenance) பழுது நீக்கம் போன்ற பராமரிப்பு பணிகளுக்கான செலவினத்தை கிராம ஊராட்சி தனது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

**16. சுகாதார வளாகங்களுக்கு பொறுப்பேற்கும் குழுவின் கடமைகள்**

- ✓ சுகாதாரப் பணியாளர்கள் சரியாக வளாகத்தை தினசரி சுத்தம் செய்கிறார்களா என்பதை தவறாமல் கவனிக்க வேண்டும்.
- ✓ சுத்தம் செய்ய உதவும் பிரஷ், துடைப்பம், பினாயில், சோப்புத்தூள் போன்றவை பணியாளருக்கு தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டும்.
- ✓ மாதாந்திர கட்டணங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் தவறாமல் உபயோகிப்பாளர்களிடமிருந்து பயன்படுத்துவோர் குழுவின் ஊக்குவிப்பாளர் வசூலித்து அவற்றை உடனுக்குடன் வங்கியில் செலுத்த வேண்டும்.
- ✓ வளாகத்திற்கான பதிவேடுகளை முறையாக உடனுக்குடன் எழுதி பராமரிக்க வேண்டும். அவற்றை ஊராட்சி தொடர்பு அலுவலர் / செயலர் போன்றவர்களிடம் காட்டி, தவறு இருப்பின் திருத்திக் கொள்ள வேண்டும்.

- ✓ மோட்டாரில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல், தண்ணீர் குழாய்களில் ஏற்படும் கசிவு, வளாக தரைமட்டத்தில் ஏற்படக்கூடிய பழுதுகள், கதவுகள், கழிவறை கோப்பைகள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை கிராம ஊராட்சியின் கவனத்திற்கு கொண்டு சென்று உடனுக்குடன் சீர் செய்ய வேண்டும்.
- ✓ மாதம் ஒரு முறை தவறாமல் பொது இடத்தில் கூடி கணக்குகளை வாசிப்பதோடு சுகாதார செய்திகளையும் பரிமாறிக் கொள்ள வேண்டும்.
- ✓ குறிப்பிட்ட கால அளவில் தவறாது மின் கட்டணம் கிராம ஊராட்சி மூலம் செலுத்தப்படுவதை உறுதிச் செய்ய வேண்டும்.

**17. சுகாதாரப் பணியாளரின் கடமைகள்**

**தினசரி கடமைகள்**

- ✓ ஒவ்வொரு சுகாதார பணியாளரும் தினந்தோறும் இரண்டு முறை கழிப்பறை கோப்பையை ஈரப்படுத்திய பின் சோப்புத்தூள் தூவி பிரஷ் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
- ✓ கழிப்பறை வளாகத்தின் உட்புறம் உள்ள பொது இடங்கள் மற்றும் வளாகத்தின் சுற்றுப்புறத்தை தண்ணீர் தேங்காமல் உலர்ந்த நிலையில் வைக்க வேண்டும்.
- ✓ வெளியேறும் கழிவு நீரைக் கொண்டு தோட்டம் ஒன்று அமைக்க வேண்டும்.
- ✓ பினாயிலுடன் அளவாக நீர் சேர்த்து வளாகத்தில் தெளித்து, ஈ மற்றும் கொசு இவை மொய்க்காத வண்ணம் பராமரிக்க வேண்டும்.

**வாராந்திர கடமைகள்**

- ✓ வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளைச் சரிபார்க்க வேண்டும்.
- ✓ மின் மோட்டார், பம்புகளை உரிய விதத்தில் பராமரிக்க வேண்டும்.
- ✓ கதவுகள், கோப்பைகள் போன்ற அனைத்துப் பகுதிகளிலும் ஏதேனும் பழுது இருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும்.
- ✓ கழிப்பறை குழாய்களில் ஏதேனும் அடைப்பு ஏற்பட்டுள்ளதா? என்று சரிபார்த்து அடைப்புகளை நீக்க வேண்டும்.
- ✓ தூசி, ஒட்டடை போன்றவற்றை நீக்கி வளாகத்தை சுத்தம் செய்ய வேண்டும்.
- ✓ வளாகத்தில் ஏற்படும் பெரிய அளவிலான பழுதுகளை உடனுக்குடன் குழுவின் கவனத்திற்கும் கிராம ஊராட்சியின் கவனத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.

**18. முடிக்கப்பட்ட வளாகங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்**

இடம் தேர்வு செய்யும் போதே பயன்படுத்துவோர் குழு அமைத்தல், பயிற்சி அளித்தல் போன்ற ஆரம்ப கட்டப் பணிகள் அனைத்தும் துவக்கப்படுவதால், பணி முடிக்கப்பட்ட உடனேயே சுகாதார வளாகங்களை பயன்பாட்டிற்கு, கொண்டு வருதல் வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தால், அதிகபட்சம் ஒரு மாதத்திற்குள்ளாக பணி முடிக்கப்பட்ட வளாகங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், மின் இணைப்பு பெறுவதில் காலதாமதம் தவிர்த்திடல் வேண்டும்.

கட்டுமானப் பணி ஆரம்பிக்கும் போதே, ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி, மின்சார வாரியத்திற்கு ஊராட்சித் தலைவர் ஊராட்சியின் பெயரில் மின் இணைப்பு பெற விண்ணப்பிக்க வேண்டும்.

**19. சிறப்பாக செயல்படும் வளாகங்கள் குறித்து அனுபவம் பகிர்தல்**

சிறப்பாக செயல்படும் சுகாதார வளாகங்கள் அருகிலுள்ள வட்டாரத்திலோ அல்லது அருகிலுள்ள மாவட்டத்திலோ இருக்குமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பயன்படுத்துவோர் குழுக்களை அத்தகைய வளாகங்களுக்கு அழைத்துச் சென்று காண்பிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**20. முன்னேற்ற அறிக்கை**

வாராந்திர முன்னேற்ற அறிக்கை வரையறுக்கப்பட்ட படிவத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் (வட்டார ஊராட்சி), திட்ட இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். இவைகளை தொகுத்து மாவட்ட அளவிலான சுருக்கத்தினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களுக்கு திட்ட இயக்குநரால் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அனுப்புதல் வேண்டும்.

**21. செய்தி, கல்வி மற்றும் தொடர்பு மற்றும் ஆவணப்படுத்துதல்**

இந்த வழிக்காட்டி நெறிமுறைகளில் கொடுக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு நடவடிக்கைகள், பயன்படுத்துவோர் குழுக்களுக்கான பயிற்சிகள் அனுபவம் பகிர்தல் ஆகியவை தொடர்புடைய செய்தி, கல்வி மற்றும் தொடர்பு மற்றும் பணிகளின் செயலாக்கத்தினை ஆவணப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ரூ.4.92 கோடி மொத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களால் மாவட்ட வாரியாக பகிர்ந்தளிக்கப்படும். அதில் மேற்கொள்ளப்படும் செலவினம் முழுமையான சம்மந்தப்பட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவணப்படுத்துதல் வேண்டும்.

**22. பொதுவான குறிப்புகள்**

- ✓ ஒவ்வொரு சுகாதார வளாகத்தையும் போதிய பயனாளிகள் பயன்படுத்துவதை கட்டிடம் கட்டும் முன்பே அலுவலர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
- ✓ சுகாதார வளாகங்களின் அருகே வசிப்பவர்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எந்தவித பாகுபாடுமில்லாமல் அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்துவோர் குழுவில் சேர்ந்து, மாதாந்திர பராமரிப்புக் கட்டணம் செலுத்தி சுகாதார வளாகங்களை பயன்படுத்தலாம்.
- ✓ இத்திட்டத்தின் முக்கியத்துவம், செயலாக்கம், கண்காணிப்புப்பணி வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் குறித்து வட்டார அலுவலர்களுக்கு போதிய பயிற்சி முதலில் அளிக்கப்பட வேண்டும்.
- ✓ எங்கு இடர்பாடுகள் ஏற்படினும் அவைகளை களைந்து இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்திட பாடுபட வேண்டும்.
- ✓ இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டார அலுவலர்கள் அருகிலுள்ள வட்டாரத்தில் உள்ள சுகாதார வளாகங்களை ஒரு குறிப்பிட்ட நாளில் ஆய்வு செய்து பயனுள்ள ஆய்வு அறிக்கையை தயார் செய்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கி தொடர்நடவடிக்கை எடுத்து இத்திட்டம் அரசின் கொள்கையின்படி சிறப்பாக செயல்பட உதவிட வேண்டும்.
- ✓ ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தி இப்பகுதிகளின் சுற்றுப்புறச்சூழல் சுகாதாரம், என்பவற்றை பொருத்து ஒட்டு மொத்த கிராமத்தின்

தற்போதைய சுகாதார நிலையிலிருந்து உயர்த்தி, நோயற்ற நல்வாழ்வு அளித்திட வழிவகை செய்திடும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் திட்டமான ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாக திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், பராமரிப்பு குழுக்கள் மற்றும் வளாக உபயோகிப்பாளர்கள் ஆகியோர் தொடர்ந்து முனைப்போடு ஈடுபட வேண்டும்.

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்